2018 ஜனவரி 9]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைப்பேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

திருப்பணி

***4467—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டிலுள்ள வாய்க்கால் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில் சிதறாமல், சிந்தாமல் ஆட்சிப் பணியை செய்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி என் பதிலுரையைத் தொடங்குகின்றேன்.*

முற்பகல் 11–15

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகரில் வாய்க்கால் அருள்மிகு காரை மாரியம்மன் திருக்கோயிலுக்கு கடந்த 10–2–2006 அன்று திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திருக்கோயிலின் தொன்மை மாறாமல் திருப்பணி செய்ய ஏதுவாக, தொல்லியல் துறையிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இத்திருக்கோயில் திருப்பணிக்கான பணிகளைச்

செய்திட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் திருப்பணிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தாய் இல்லாமல் நானில்லை;
தானே எவரும் பிறந்ததில்லை;
எனக்கொரு தாய் இருக்கின்றாள்;
என்றும் என்னைக் காக்கின்றாள்"

என்ற பாடலுக்கேற்ப, எங்கள் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நூற்றாண்டு விழா நாயகன், பாரத ரத்னா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன்.

ஈரோடு மாநகராட்சிக்கு 300 கோடி ரூபாயில் மேம்பாலப் பணி, 550 கோடி ரூபாயில் குடிநீர்த் திட்டம், 54 கோடி ரூபாயில் மேம்பாலப் பணி போன்று பல்வேறு திட்டங்களை வாரி வழங்கிய வள்ளலின் வாரிசாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை வழிநடத்தும் நல்லாட்சி நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தைத் திருநாள்' பொங்கல் என்று சொன்னாலே, தமிழ் இளைஞர்களுக்கு பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுதான் நினைவிற்கு வரும். அந்த வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை தொடர்ந்து நடத்திட அனுமதி வாங்கித் தந்து, ஜல்லிக்கட்டில் ஒரு சரித்திரம் படைத்த சரித்திர நாயகன், துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். இன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பிறந்த நாள், அவரையும் வாழ்த்துகிறேன்.

2018 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகர், காரை வாய்க்கால் அருள்மிகு காரை மாரியம்மன் திருக்கோயில் மிகவும் புகழ் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு இன்று பிறந்த நாள் என்று கூறினார். இந்த அவையின் சார்பாக எனது வாழ்த்துகளையும், அவை உறுப்பினர்களின் வாழத்துகளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. அந்த மாரியம்மன் திருக்கோயில் மிகவும் புகழ்பெற்றது. அக்கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது. அந்தத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்வதற்கு உபயதாரர்கள் தயாராக உள்ள நிலையில், திருப்பணி செய்வதற்கு விரைவாக அனுமதி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோரியிருந்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அனுமதி வழங்குவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அனுமதியை விரைவாக வழங்கி, அத்திருப்பணியைத் துவங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் துறையின் அனுமதியைப் பெற்று, விரைவாக அத்திருக்கோயில் குடமுழுக்கு செய்யப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருக்கோயிலுக்கு ஈரோடு அருள்மிகு பெரிய மாரியம்மன் வகையரா திருக்கோயில் என்றுதான் பெயர். ஈரோடு அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயிலில், 19–3–1961–ல் குடமுழுக்கு நடைபெற்றது. சுமார் 57 ஆண்டுகள் ஆகின்றன. இந்தத்*

திருக்கோயிலுக்கு ஆண்டு வருமானமாக ரூ.1½ கோடி வருகிறது. ஆண்டுதோறும் 40 நாட்கள் விழா நடைபெறும் இத்திருக்கோயிலில் திருப்பணியும் ஓரளவிற்குச் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகர், அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் குடமுழுக்கு செய்வதற்கு உரிய இடவசதி இல்லை. இத்திருக்கோயிலின் அருகிலுள்ள அரசு புறம்போக்கு நிலமான 12.66 ஏக்கர் நிலம் CSI–தென்னிந்திய திருச்சபையின் அனுபவத்தில் உள்ளது. மேற்கண்ட நிலத்தை வருவாய்த் துறை அரசு புறம்போக்கு நிலமாக அறிவித்ததால், இதை எதிர்த்து தென்னிந்திய திருச்சபை, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 13313/2017 ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கில் திருக்கோயிலையும் தங்களது எதிர்மனுதாரராக சேர்க்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் சாதகமாகத் தீர்ப்பு பெற்று, குடமுழுக்கு நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.*

முற்பகல் 11–20

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கேள்வி, திருப்பணி பற்றியதாக இருந்தது. சிதிலமடைந்த அந்தத் திருக்கோயிலுக்கு திருப்பணி கேட்டிருந்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதுகுறித்துப் பதிலளித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில், சிவகங்கை மாவட்டத்தில், பல்வேறு கோயில்களில் திருப்பணிகள் துவங்கப்பட்டன. அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. குறிப்பாக, காரையூர் கிராமத்தில்,*

2018 ஜனவரி 9]

சிவன் கோயில் திருப்பணிகள் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றன. அதுபோல அரளிக்கோட்டை என்ற கிராமத்தில் 32 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் நிதி மாற்றங்கள் செய்யப்பட்டு, ராஜ கோபுரம் அமைக்கும் பணியும் நடைபெற்றது. ஆனால் அதற்குப்பிறகு 6½ ஆண்டு கால இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஒரு சிறு செங்கலைக்கூட எடுத்து வைக்கவில்லை. திருப்பணிகள் 20 சதவிகிதம், 30 சதவிகிதம் நடைபெற்ற அதே நிலையில்தான் இப்பொழுதும் இருக்கின்றன. ஏற்கெனவே இதுகுறித்து சென்ற கூட்டத்தொடரில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது, உரிய நடவடிக்கை எடுத்து விரைந்து செய்து தருகிறேன் என்று அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால், இதுவரை எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. இனிமேலாவது அந்தத் திருப்பணிகள் நடைபெறுவதற்கு தாங்கள் அனுமதி வாங்கித் தருவீர்களா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆகம விதிமுறையின்படி, ஒவ்வொரு திருக்கோயிலிலும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் 8,843 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2016–2017 ஆம் ஆண்டு மட்டும் 958 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. தற்போது 2017–2018 ஆம் நிதியாண்டில் 590 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயிலின் கோபுரம் அமைக்கும் பணிகள், அந்தந்த திருக்கோயில் சம்பந்தப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. அந்தக் கோயிலின் திருப்பணிகளை விரைவுபடுத்தி குடமுழுக்கு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்*

என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 மற்றும் 2) @

பட்டியல்–1

1—

உபரிநீரை கண்மாய்க்கு கொண்டுவரும் திட்டம்

வினா எண் 1328—திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் காவேரி, கொள்ளிடம் உபரிநீரை, மாயனூர், மருங்காபுரி, மறவாமதுரை, கவிநாடு வழியாக கண்மாய்க்கு கொண்டுவரும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் காவேரி, கொள்ளிடம் உபரிநீரை மாயனூரிலிருந்து மருங்காபுரி, மறவாமதுரை, கவிநாடு வழியாகக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் திட்டத்திற்கு தற்போது பரிசீலனையில் உள்ள உத்தேச காவேரி–வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய் வழித்தடத்திற்கு பதிலாக மாற்று வழித்தடத்தில் (Alternate Direction) மாயனூரிலிருந்து மருங்காபுரி, மறவாமதுரை, கவிநாடு வரை 114.300 கி.மீ. நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.